### டாக்டர் எம்.ஜி.ஆர்.

# மருத்துவப் 'பல்கலைக் கழக ஆராய்ச்சி நாள் - அறிவேள்வி 2025'

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் – மருத்துவ மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்பித்தார்!

சென்னை, செப். 28- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தருமான மா.சுப்பிரமணியன் தலைமையில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக வெள்ளி விழா கலையரங்கத்தில் 'பல்கலைக்கழக ஆராய்ச்சி நாள் - அறிவேள்வி 2025' விழா, நேற்று முன்தினம் (26.09.2025) சிறப்புடன் நடைபெற்றது.

இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ மாணவர்களின் ஆராய்ச்சித் திறனை ஊக்கப்படுத்துகின்ற வகையில், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக வரலாற்றில் மூன்றாவது முறையாக, 'பல்கலைக்கழக ஆராய்ச்சி நாள் 2025' இன்று கொண்டாடப்பட்டது.

இப்பல்கலைக்கழக ஆராய்ச்சி நாள் பின்வரும் நோக்கங்களுடன் கொண்டாடப்பட்டது.

- படைப்புச்சிந்தனையை வளர்ப்பது
- மேம்பட்ட கல்வித் திறன்களைப் பெறுவது
- கற்றல், செயல்பாடு மற்றும் அறிவியல் உற்பத்தித்திறனை வளர்ப்பது
- வாய்மொழி சுயாதீன விமர்சன / எழுதப்பட்ட தொடர்பு திறன்கள் / சிந்தனை திறன்களை வளர்ப்பது
- சுகாதாரப் பராமரிப்பு தீர்வுகளை மேம்படுத்துதல் மற்றும் மருத்துவப் பயிற்சியை மேம்படுத்துதல்
- ஆசிரியர் வழிகாட்டிகளை வளப்படுத்துதல்

இவ்வாண்டு மருத்துவம், பல் மருத்துவம், ஆயுஷ், செவிலியர், மருந்தியல், துணை மருத்துவம், மற்றும் மருத்துவம் சார்ந்த துணை படிப்புகளின் மாணவர்கள் அனைவரும் ஆராய்ச்சி குறிப்புகளை சமர்ப்பித்தனர். இந்த நிகழ்வு கடந்த ஆண்டை காட்டிலும் வியக்கத்தக்க வளர்ச்சியாகும்.

இவ்விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மரு.கே. நாராயணசாமி, திட்ட விளக்கஉரை ஆற்றினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நலத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அமைச்சர் தமது தலைமை உரையில் ;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசில் மருத்துவத்துறையில் தமிழ்நாடு "இந்தியாவில் பிற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும் திகழ்ந்து வருகிறது என்பதை பெருமையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன் என கூறினார்.

அந்த வகையில் இந்தியாவில் உள்ள மருத்துவப் பல்கலைக்கழகங்களில் மிகவும் சிறந்து விளங்கும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சார்பில் பல புதிய முன்னெடுப்புகளாக பல்கலைக்கழக ஆராய்ச்சி நாள், மருத்துவ ஆராய்ச்சிக்கான நிதி உதவியை உயர்த்துதல், பல்கலைக்கழக மேம்பட்ட ஆராய்ச்சி ஆய்வு இதழை வெளியிடுதல் உள்ளிட்ட பல முன்னேற்றம் தரும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதை எண்ணி இப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேரா.மரு.கே.நாராயணசாமி அவர்களை பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன் என அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆண்டின் முக்கிய மைல்கல்லாக பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி தின நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் பல்வேறு சுகாதார துறைகளின் மாணவர்களை இணைத்துச் செயல்பட்டது. இது பல்துறை ஆராய்ச்சியை ஊக்குவிக்கின்ற ஒரு விதமாக மட்டுமல்லாமல், இன்று சிகிச்சை முறைகளில் உள்ள பிரச்சினைகளுக்கு நவீன தீர்வுகளை கண்டுபிடிக்க வழிவகுப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

**இளம் விஞ்ஞானி விருது மற்றும் போட்டிகள்!**

மாணவர்களின் முக்கியமான ஆராய்ச்சி சாதனைகளை பாராட்டும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட இளம் விஞ்ஞானி விருது, தரமான ஆராய்ச்சி கட்டுரைகளுக்கு வழங்கப்பட்டது. விருது பெற்ற மாணவர்கள் தங்களது ஆராய்ச்சி துறையில் எதிர்காலத்தில் முன்னணி பெறுவார்கள் என நம்பிக்கை தெரிவித்தார்.

மருத்துவ ஆராய்ச்சியில் மாணவர்களின் முனைப்பு, நாட்டின் மருத்துவத்தை மேம்படுத்தும் விதமாக செயற்கை நுண்ணறிவு போன்ற புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தவும், இது தமிழக மருத்துவத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு புதிய திசையைக் காட்டும்.

இவ்வாறு அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

அமைச்சர் பின்வரும் மருத்துவ ஆராய்ச்சி புத்தகங்களை விழா மேடையில் வெளியிட்டார்கள்.

1) *Health Research Made Simple A Step-by-Step Guide for Health Professionals*
2) *CAPTAIN ACTS AS WARRIOR TAMILNADU'S PANDEMIC LEARNINGS*
3) *Road Map for Health Care & MedTech Hackathon - From Concepts to Creation*
4) *Designing Health Research: A Comprehensive Text Book to Health Research Practice*
5) *Mastering Medical Research: Essentials of Methodology & Biostatistics*
6) *University Research Day Activities ARIVELVI 2025 - Abstract Book*

இந்நிகழ்ச்சியை முன்னிட்டு பல்வேறு கல்வி மற்றும் ஆராய்ச்சி தொடர்பான போட்டிகள் பல்கலைக்கழக இணைப்பு கல்லூரிகளுக்கு நடத்தப்பட்டன. அதில் ஹேக்கத்தான், குழந்தைகள் வினாடி வினா, ஆராய்ச்சி கட்டுரை வாசிப்பு, மீம் உருவாக்கம், ஜஸ்ட் எ மினிட் (JAM), குறும்படம் ஆகியவை இடம்பெற்றன. இவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், சிறந்த ஆராய்ச்சியாளர் விருது (ஆசிரியர்களுக்கும் & மாணவர்களுக்கும்) மற்றும் சிறந்த கல்வி நிறுவனங்களுக்கும் சான்றிதழ்களை அமைச்சர் அவர்கள் அளித்து சிறப்பித்தார்கள்.

**புதுமை • ஒருங்கிணைப்பு • தாக்கம்** என்ற கோட்பாட்டை முன்னெடுத்து பல்கலைக்கழகம் தொடர்ந்து கல்வி மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டிற்காக பாடுபட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் சென்னை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் மரு.சாந்தாராமன், பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மரு.கி. சிவசங்கீதா, பல்கலைக்கழகத்தின் துறைதலைவர்கள், மருத்துவக் கல்லூரியின் முதல்வர்கள் மற்றும் மருத்துவ பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# கதையளக்கும் மனநோயாளியாக மாறி வருகிறார் சீமான்!

## தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி அறிக்கை!

**சென்னை, செப். 28 - பேரறிஞர் அண்ணா பற்றி அவதூறு கருத்து கூறிய சீமானுக்கு கழக மாணவர் அணிச் செயலாளர் இரா.இராஜீவ்காந்தி எச்சரிக்கை அறிக்கை வெளியிட்டுள்ளார்.**



அவரது அறிக்கை வருமாறு :-

பேரறிஞர் அண்ணா அவர்களையும், முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களையும் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான், தரந்தாழ்ந்து வாய்த்துடுக்காகப் பேசி இருப்பது அநாகரிகத்தின் உச்சம்; கடும் கண்டனத்துக்கு உரியது.

1956ஆம் ஆண்டு மதுரை மீனாட்சி அம்மன் ஆலய தமிழ் மாநாட்டில் நடக்காத விஷயத்தைச் சொல்லி அண்ணாவை பா.ஜ.க.வின் அண்ணாமலை விமர்சித்தார். அவரின் வழித்தோன்றலாக பா.ஜ.க.வின் பி டீமாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் சீமான், அதே வழியில் பேரறிஞர் அண்ணாவைக் கடும் சொற்களால் விமர்சித்திருக்கிறார்.

தமிழ்நாட்டு அரசியல் மட்டுமல்ல; உலக அரசியலில் பேரறிஞர் அண்ணா போன்ற இன்னொரு தலைவரை பார்க்க முடியாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவர் என்பது மட்டுமல்ல, ஆல் போல் தழைத்து தமிழ்நாட்டின் அரணாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்தவர் என்பது மட்டுமல்ல திராவிட இயக்கத்தின் மாபெரும் தலைவர்களில் ஒருவர் மட்டுமல்ல - உலகின் மாபெரும் சிந்தனையாளர்களில் ஒருவர்; தமிழ்த் தாயின் தலைமகன்; தமிழ்நாட்டு மக்களின் உயிரோட்டம். நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி.

இன்றுவரை பேரறிஞர் அண்ணாவே தமிழ்நாட்டை ஆட்சி செய்து வருகின்றார். அதன் வெளிப்பாடுதான், அண்ணாவைப் பொறுக்க முடியாமல்தான் ஆத்திரத்தில் வாய் வழியாக வாந்தி எடுத்திருக்கிறார் சீமான். எப்போதும் ஊடக வெளிச்சம் என்ற போதையைத் தேடும், மனப் பிறழ்வும், சுயநலப் பித்தும், ஒழுக்கக்கேடும் கொண்ட ஒருவர் பேரறிஞர் அண்ணாவின் பெயரைக் கூடச் சொல்லத் தகுதியற்றவர். பேரறிஞர் அண்ணாவைப் பற்றி எவரொருவரும் விமர்சிக்கக் கூடத் துணிந்ததில்லை. துணிந்தவர்கள் எல்லாம் இருக்கும் இடமே தெரியாமல் காணாமல் போனார்கள்.

வாய்க்கு வந்ததையெல்லாம் அடித்துவிடும் சீமான், ஊடகத்தினரைச் சந்திக்கும் போதும் சரி, மேடையில் பேசும்போதும் சரி, வரலாற்றைத் திரித்து, பொய்களை அள்ளிவிட்டு, தனக்கு முன் இருப்பவர்கள் எல்லாம் முட்டாள்கள் என்ற எண்ணத்திலேயே கதையளக்கும் மனநோயாளியாக மாறி வருகிறார்.

**தற்குறிகளுக்கு எப்படி தெரியும்?**

திராவிட உணர்வை ஊட்டி தமிழ்நாட்டு மக்களைத் தலை நிமிரச் செய்தவர் பேரறிஞர் அண்ணா. அவரது பெருமை சீமான் போன்ற தற்குறிகளுக்கு எப்படித் தெரியும்? தமிழ்நாட்டில் தற்போது ஒரு மோசமான அரசியல் உருவாகிக் கொண்டிருக்கிறது. கூட்டம் கூடினால் என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்று சில அரசியல் அரைவேக்காடுகள் நினைத்துக் கொள்கின்றன.

இன்றைக்குத் தமிழ்நாடும் தமிழர்களும் அடைந்துள்ள வளர்ச்சிக்கு அடித்தளமிட்டவை அண்ணாவின் தொலைநோக்குச் சிந்தனைகள்தான். சாமானியன் உயர, தலை நிமிர வைத்த அண்ணாவைப் பழிப்பது சாமானிய மக்களைப் பழிப்பதற்குச் சமம். ஆயிரம் ஆண்டு களாகத் தமிழ்நாட்டின் மீதும் தமிழ்மொழியின் மீதும் சுமத்தப்பட்டிருந்த ஆதிக்கத்தை அடித்து நொறுக்கி தமிழர்களின் தன்மானத்தை உயர்த்திப் பிடித்த அண்ணாவை இழிவுபடுத்துவது ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டையும் இழிவுபடுத்துவதற்கு ஒப்பாகும்.

தமிழர்களின் தலைமகன் அண்ணாவைத் தமிழர்கள் எந்த அளவுக்கு நேசித்தார்கள் என்பதற்கு அவரின் மறைவுக்குக் கடல்போல் கூடிய தமிழர்களின் பெருங்கூட்டமே சாட்சி. சீமான் மனிதர்களோடு பேசவே அருகதை அற்றவர். மாடுகளுடன் மரங்களுடனும் மலைகளுடன் பேசிக் கொண்டிருக்கும் மனநோயாளிகளுக்கு மனிதர்களிடம் பேசவே தெரியாது.

**மானமுள்ள தமிழனின் கோபத்திற்கு ஆளாகாதே!**

நாக்கை வைத்து அரசியல்தான் நடத்துவார்கள். ஆனால், சீமானோ அந்த நாக்கை வைத்து வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார். பிரபாகனுடன் இருக்கும் புகைப்படம், ஈழத்தில் துப்பாக்கி பயிற்சி, கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றை யவை' திருக்குறளுக்கு பொய்யுரை, காமராஜர் கட்டிய பள்ளியில் அப்துல் கலாம் எனச் சீமான் சொன்ன பொய்கள் எத்தனை எத்தனை? கோயாபல்ஸ் கூட சீமானிடம் தோற்றுப் போய் நிற்பான். பேரறிஞர் அண்ணா அவர்கள் மீது இனி ஓர் அவதூறு சொல் வீசப்பட்டாலும், மானமுள்ள தமிழ்நாட்டு மக்கள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் கோபக் கனலுக்கு ஆளாக நேரிடும்.

இவ்வாறு கழக மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி தமது அறிக்கையில் எச்சரித்துள்ளார்.

### தி.மு.க. மாணவர் அணி

# திருப்பூர் மத்திய மாவட்டம் திருப்பூர் தெற்கு மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி அறிவிப்பு!

திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் தெ.விஜயசிம்மராஜா அவர்களுக்குப் பதிலாக திரு. **செ. திலகராஜ்,** பி.பி.எம்., (நெ.9/5, கொங்கு நகர் 3-வது வீதி, திருப்பூர் - 641 607) அவர்கள் திருப்பூர் தெற்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளராகவும்;

திருப்பூர் தெற்கு மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ம.பிரேம்கவின், சி.சுரேசு, திருமதி இரா. செல்லாத்தாள் மற்றும் ச.மதன்குமார் ஆகியோருக்குப் பதிலாக

ஆ. பீர்முகமதுசேக், 35, பழனியம்மாள் நகர் முதல் வீதி, விஜயாபுரம், காங்கேயம் சாலை, திருப்பூர்.

க. சாம் கிஷோர், 59/44, ஏபிடி சாலை, கருவம்பாளையம், திருப்பூர்.

வெ.குணா, 22/17, வி.பி.சிந்தன் நகர், வலையங்காடு, சாமுண்டிபுரம், திருப்பூர்.

செல்வி அ. கலையரசி, 2/506, கேசி.எம். நாச்சம்மாள் காலனி, பெரியாண்டிபாளையம், திருப்பூர்.

ஆகியோர் திருப்பூர் தெற்கு மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 26-09-2025.

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

# ஒன்றியத்தில் ஓர் அரசியல் வரலாறு! 'ஓரணியில் தமிழ்நாடு'!!

எல்லோருக்கும் நிகழ்கின்ற எல்லாவற்றையும், எல்லாக் காலத்திலும் மிகவும் விரைவாக அறிந்து கொள்ளுதல், வேந்தனுக்கு உரிய தொழிலாகும் என்ற வள்ளுவரின் கூற்றிற்கு இணங்க முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களால் "ஓரணியில் தமிழ்நாடு என்ற தலைப்பில் 'மண், மொழி, மானம்' காக்க ஓரணியில் ஒன்றிணைவோம் என்ற புரட்சிகர அடிகோடிட்டு வாக்குச்சாவடிகள் தோறும் 30 சதவீத வாக்காளர்களை தி.மு.கழக உறுப்பினர்களாக்கும் திட்டத்தை முதல்வர் கழகத் தலைவர் மு.க ஸ்டாலின் அவர்கள் மதுரையில் நடைபெற்ற திமுக பொதுக்குழுக் கூட்டத்தில் அறிவித்திருந்தார்.

இதையடுத்து, இந்த உறுப்பினர் சேர்க்கை திட்டத்தை ஜூலை 1 சென்னையில் கழகத் தலைவர் தொடங்கி வைத்தார். முன்னதாக, திமுக தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் தொகுதிக்கு ஒருவர் என 234 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதுடன், உறுப்பினர் பதிவுக்கென தனி செயலியும் உருவாக்கப்பட்டது. பயிற்சி பெற்ற 234 நபர்களும் தொகுதி வாரியாக 68 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகளில் வாக்குச்சாவடி எண்முறை முகவர்களுக்கு பயிற்சி அளித்து, ஜூலை 2ம் தேதி திமுகவின் நிர்வாக ரீதியான 76 மாவட்டங்களிலும் ஓரணியில் தமிழ்நாடு பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டது. ஜூலை 3ம் தேதி தமிழகம் முழுவதும் அனைத்து வாக்குச்சாவடி பகுதிகளிலும் வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து பரப்புரை செய்ய கழகத் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. இதில், வீடு வீடாக செல்லும் போது எதிர்க்கட்சியினர் இல்லங்களுக்கும் நேரில் சென்று பேச வேண்டும் என்றும் முதல்வர் அறிவுறுத்தியிருந்தார்.

"ஓரணியில் தமிழ்நாடு என்பது வெறும் உறுப்பினர் சேர்க்கை அல்ல தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க ஓரணியில் திரளும் மாபெரும் முன்னெடுப்பு.

**கொள்கை நீட்சி :**

**கோட்டைக் கொடி நிழலாடாது பறக்கும்**
**சுதந்திர காற்றின் சுயமரியாதையோடு!**
**செங்கோல் நழுவாது சமூகநீதி பிறக்கும்**
**திராவிட பேரரசின் கொள்கை பற்றோடு!!**

தந்தை பெரியார் வகுத்த சுயமரியாதை, சமத்துவம், சமூகநீதி கோட்பாடுகளை அடிநாதமாக கொண்ட கொள்கை இயக்கம் நம் திமு கழகம்.குடிஅரசு, புரட்சி, பகுத்தறிவு, விடுதலை, உண்மை ஆகிய தமிழ் இதழ்களின் மூலம் சுய மரியாதைச் சிந்தனைகளை விதைத்தவர் தந்தை பெரியார். கடமை,கண்ணியம்,கட்டுப்பாடு என்னும் மானுட ஒழுக்கத்தை உலகிற்கு பறைசாற்றி மேடைப் பேச்சில் தனக்கென்று ஒரு புதிய வழியை ஏற்படுத்திக் கொண்டு மக்கள் மனதில் சீர்த்திருத்த கருத்துகளை விதைத்தார் பேரறிஞர் அண்ணா. இன்று திராவிட இயக்க மேடைப் பேச்சு ஒரு கலையாக மதிக்கப்படுவதற்கு பேரறிஞர் அண்ணாவின் உரைகளும் ஒரு காரணமாக அமையும். தந்தை பெரியாரின் பகுத்தறிவு சிந்தனையையும் பேரறிஞர் அண்ணாவின் சீர்திருத்தக் கருத்துக்களையும் தன் மூச்சுக்கு சமமெனகொண்டு தமிழ் மொழியையும்,சமூக நீதியையும் இருவிழிக்கு ஒப்பாக நினைத்தவர் நம் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்த அளப்பரிய திராவிட இயக்க ஆலமரத்தின் கொள்கை பிடிப்பின் ஆணிவேராய் வீற்றுருக்கிறார் நம் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். பவள விழா கண்ட தன்னிகரில்லா கொள்கை நீட்சியின் எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் கோட்பாட்டை நடைமுறைப்படுத்தி வரும் திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**திராவிடம் காத்த மண்ணும் மொழியும்:**

**தமிழ் என்று சொல்லும் முன்னே**
**வீரத்து நெஞ்சம் அது நிமிர்கிறது!**
**தமிழ் என்று சொல்லும் முன்னே**
**மென் குரலது இடியொலி ஏற்கிறது!!**

பண்பாடு என்பது சமுதாயம் வாழும் முறையாகும். இது தனிமனிதனின் அல்லது ஒரு குழுவினரின் எண்ணங்களாலும் செயல்களாலும் அமைந்து, மனிதனின் வாழ்வியல் முறைகள், சமூக கட்டமைப்பு போன்ற நல்ல வளர்ச்சி தரும் இன்பம் நல்கும் பொருளாகும். இதனையே வள்ளுவரும்,

**"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது"**

தன் அறிவை விட தன் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியைக் கண்டு பெற்றோர்கள் இன்பம் கொள்வது இயல்பு. அது போலவே மனிதன் பண்பாட்டோடு பிறப்பதில்லை. சூழலோடு வாழ அவனைப் பொருத்திக் கொள்ள உதவும் கற்றல் முறையே பண்பாடு என்பார்கள் ஆய்வாளர்கள். நல்ல எண்ணங்களும், பழக்கங்களுமே பண்பாடாக வளர்ச்சி பெற்று புகழ், ஈகை, வீரம், விருந்தோம்பல், தன்மானம், நட்பு, பொதுநலம் போன்ற பண்புகள் நிறைந்த மனித உள்ளங்களால் பண்பாடாக வளர்ச்சிப் பெற்றன.

**திராவிட இயக்கத்தால் தமிழ்** இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுதியது இதழியல் தமிழ், திரைத்தமிழ், ஆட்சித்தமிழ் உள்ளிட்ட புதிய இலக்கியச் சிந்தனைகள் திராவிட இயக்கத்தால் உருப்பெற்றன. திராவிட இயக்கத்தை வளர்த்தெடுக்க கவிதைகள், உரைகள், மேடைப் பேச்சுகள், சிறுகதைகள், நாடகங்கள் முதலிய இலக்கிய வகைகள் பயன்படுத்தப்பட்டது.

**டாக்டர் ஆ.கா.தருண்**
*மாநில துணைச் செயலாளர்,*
*தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி*



**தமிழ் சீர்திருத்தவாதி தந்தை பெரியார்** அவர்கள் தமிழ் எழுத்துகளில் மாற்றங்களை ஏற்படுத்தினார் உயிர் எழுத்தான "ஐ" என்பதை "அய்" என்றும், "ஔ" என்பதை "அவ்" என்றும் எழுதுமாறு வலியுறுத்தினார். இவருடைய இச்சீர்திருத்தத்தைத் தமிழக அரசு ஏற்றுக் கொண்டு 1978ஆம் ஆண்டு அதனை நடைமுறைப்படுத்தியது. மேலும், தந்தை பெரியாரின் சிந்தனைகள் பல இதழ்களில் தலையங்கங்களாக இடம் பெற்று மேடையிலும், தலையங்கக் கட்டுரையில் அவர் பயன்படுத்திய எளிய தமிழ் படிப்போரைக் கவர்ந்தது.

**மொழி நாயகன் பேரறிஞர் அண்ணா** அவர்களின் மேடைப் பேச்சுகள் இலக்கியமாக, அவருடைய உரைகள் கவிதை நடையில், இலக்கியச் செழுமை மிக்க மொழி ஆளுமையாக கருதப்படுகிறது."தம்பிக்கு" என்ற பெயரில் அவர் எழுதிய கடிதங்கள் சமுதாயத்தின் மீதும், தமிழ் மொழியின் மீதும் அவர் கொண்டிருந்த பற்றை வெளிப்படுத்தியது. திரைப்படங்களில் இவரது உரையாடல் அடுக்கு மொழியில் அமைந்து மக்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது. அதனால் "அடுக்கு மொழி அண்ணா என்று மக்களால் அழைக்கப்பட்டார்.

செம்மொழி தந்த தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பல்வேறு படைப்புகள் மூலம் தொண்டாற்றி ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான குண்டலகேசியை மையமாகக் கொண்டு மந்திரிகுமாரி என்ற நாடகத்தைப் படைத்தார். உதயசூரியன், நானே அறிவாளி உள்ளிட்ட நாடகங்கள் அரசியல் பிரச்சார நாடகங்களாக வெளிவந்தன. திரைத்துறையில் எளிய வசனங்களின் மூலம் புதிய வரலாறு படைத்தவர் டாக்டர் கலைஞர். மனோகரா, மந்திரிகுமாரி, பூம்புகார், பராசக்தி முதலிய திரைப்படங்களின் வசனங்கள் மாறுபட்ட கோணத்தில் தமிழை அடையாளம் காட்டியது அவருடைய "குறளோவியம்" எளிய முறையில் பாமர மக்களும் படித்து இன்புற மிகச் சிறந்த படைப்பாகப் போற்றப்படுகின்றது.

**தமிழ் தவிர்த்து வேறில்லை**
**நாவில் களிநடம் இனிதுற**
**தமிழ் பொதுமறை மறையாது**
**பழமை வான் கடந்தும்**
**தமிழ் பற்று கொணர்ந்து**

**தமிழ் மூச்சை சுவாசிப்போம்!**

**திராவிட தீரர்களின் தமிழ் மாநாடு:**

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய மூவரின் படைப்பால் தமிழுக்குத் தொண்டு செய்ததோடு, பல்வேறு மாநாடுகளை நடத்தித் தமிழ் மொழியை உலகரங்கிற்குக் கொண்டு சேர்த்த பெருமைக் குரியவர்களாகப் போற்றப்படுகின்றனர். தந்தை பெரியாரின் திருக்குறள் மாநாடு, அறிஞர் அண்ணாவின் உலகத்தமிழ் மாநாடு, முத்தமிழறிஞர் கலைஞரின் செம்மொழி மாநாடு ஆகியவை தமிழின் மொழி வளமையை, இலக்கணச் சிறப்பை, இலக்கியச் செழுமையை உலக அறிஞர்களுக்கு தமிழ் மொழியின் உயிர்ப்பைக் காட்டியது. இன்றைய கணினி உலகில் தமிழை அடுத்தத் தளத்திற்குக் கொண்டு செல்லும் நோக்கில் "தமிழ் இணையம் 1999 என்ற பெயரில் மாநாட்டை நடத்திய பெருமை முத்தமிழறிஞர் கலைஞரையே சாரும். கணினித்தமிழை வளர்த்தெடுக்கும் நோக்கில் "தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தைத் தொடங்கிய பெருமையும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு உண்டு.

**ஒன்றிணைவோம் ஓரணியில்! வென்றெடுப்போம் சரித்திரத்தில்!!**

**கருணை காத்த பாவம் கொண்ட மனிதம்**
**கணம் காத்த வலி கொண்ட இதயம்**
**கனம் பெருத்த துளி கொண்ட உதிரம்**
**கண் சிவந்த வெறி கொண்ட கோபம்**
**காயம் பதிந்த புத்தி கொண்ட தந்திரம்**
**தருணம் காத்து ஏங்கி நிற்கும் அரசியல் யுத்தம்!!**

தமிழ்தமிழர்தமிழ்நாடு நலனுக்கு எதிராகச் செயல்படும் பாஜக பாசிசவாதிகளிடம் இருந்து இந்தியா ஒன்றியத்தின் சனநாயகத்தைக் காத்திடவும், பறிக்கப்படும் மாநில உரிமைகளை காப்பதற்கும் அரசியலமைப்பு சட்டத்தைப் பாதுகாத்திடவும் ஒரே வழியான 2026 சட்டமன்ற தேர்தலுக்கு தமிழ்நாடெங்கும் மக்களை ஒருங்கிணைந்து வருகிறது 'ஓரணியில் தமிழ்நாடு' எனும் கழகத் தலைவர் அவர்களின் மாபெரும் முன்னெடுப்பு.

**தணியாது வேட்கை ஒன்றியத்தில் மீள**
**தரணியில் திராவிடம் நின்று வெள்ளும்!**
**வஞ்சக சாட்சியெல்லாம் நீதியில் கரிக்கிட்டு**
**நெஞ்சத்து திராணியில் திராவிடம் மீளும்!**

தமிழ்நாட்டு மக்களிடையே மதவாதப் பிரிவினையை ஏற்படுத்த நினைப்பவர்களுக்கும், அவர்களுக்குத் துணை போகிற துரோகிகளுக்கும் தமிழ்நாட்டில் இடமில்லை என்பதை மக்கள் உறுதி செய்யும் வகையில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை தேர்தல் வெற்றியின் சாட்சியாக நடந்து வருகிறது. திராவிட மாடல் அரசின் சீரிய செயல் திட்டங்களினால் பெண் கல்வி, மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ், இலவச மிதிவண்டி, ஆகியவற்றோடு, கிராமப் புற மற்றும் பட்டதாரிகளே இல்லாத குடும்பங்களில் இருந்து வரும் மாணவர்களுக்குச் சலுகை, மருத்துவ கல்லூரிகளில் சேர நுழைவுத்தேர்வு ஒழிப்பிற்கு முன்னெடுப்பு, சமச்சீர்க் கல்வி, நான் முதல்வன், புதுமை பெண் திட்டம், விடியல் பயணம், கலைஞரின் மகளிர் உரிமை தொகை திட்டம் போன்ற எண்ணற்ற திடங்களினால் தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்தினரும் பயன்பெறுவதற்காக பாடுபட்டது திமுக. இப்படி மொழி நலம், மகளிர் நலம், மாணவர் நலம், தொழிலாளர் நலம், விவசாயிகள் நலம், புதிய தொழிற்சாலைகள், புதிய மின் திட்டங்கள், புதிய வேலை வாய்ப்புகள் உள்ளிட்ட தமிழ்நாட்டின் நலனுக்காக, உழைத்து வருவது திமுகவும் நம் கழகத் தலைவர் அவர்களும்தான்.

"நான் ஒரு சுதந்திர மனிதன்; எனக்குச் சுதந்திர நினைப்பு, சுதந்திர அனுபவம், சுதந்திர உணர்ச்சி உண்டு. என்ற தந்தை பெரியாரின் எண்ணத்தை பிரதிபலிக்கும் விதமாக திராவிட மாடல் நல்லாட்சி நாயகர் கழகத் தலைவர் தமிழ்நாடு மக்கள் சுதந்திர மூச்சை சுவாசிக்க அனுதினமும் உழைத்ததன் சாட்சியாக வரலாற்றுப் பெருமை கொண்ட இலண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழாவும் தந்தை பெரியார் படத்திறப்பும் நடந்துள்ள வரலாற்றுப் பெருமை தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கிடைத்திருப்பது சுயமரியாதைக்கு சான்றாக விளங்குகிறது.

**நரிவேடமிட்டு நாடாள நினைக்கும் கூடாரங்களை**
**கிழித்தெரிய வருகுதோ திராவிட போர்வாள்**
**தென்முனை தொட்டு ஏற்கும் போர்கொடி**
**வடமுனை மேற்நின்று ஆளவிற்கும் திராவிடம்**

**கொள்கை மாட்சிமை**

**நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்**
**குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.**

நிலத்தின் இயல்பை அதில் விளைந்த பயிர் காட்டும்; அதுபோலக் குடும்பத்தின் இயல்பை அதில் பிறந்தவர் பேசும் சொல் காட்டும் என்பதற்கு இணங்க கழகத் தலைவர் தன்னிகரில்லா தமிழ்நாட்டை உருவாக்கும் தமிழின பற்றாளராய் தமிழ்நாட்டின் மண் மொழி மானம் ஆகியவற்றை எந்நாளும் காப்பேன்! ஆதிக்கச் சக்திகளின் முன் தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டேன்! என்ற சூளுரையை தொடர்ந்து நியாயமற்ற தொகுதி மறுவரை; வாக்குரிமையைப் பறிக்கும் SIR; நம் மாணவர்களுக்கு உரிய கல்வி நிதி; தமிழ் மொழி, பண்பாடு மற்றும் பெருமைக்கு எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்துப் போராடுவேன் என்றும், ஒவ்வொரு உழைக்கும் வர்க்கத்தின் நலன்களையும் பாதுகாக்கத் தேவையான நிதிக்காகப் போராடுவேன் என்று தலைவர் ஏற்றுள்ள உறுதிப்பாட்டிற்கு வலு சேர்க்கும் வகையில் கழகத்தினர் அனைவரும் அதனை செயலாக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இல்லங்களுக்கும் வாக்குச் சாவடியைச் சேர்ந்த பாக முகவர்கள், பாக எண்முறை முகவர்கள், இளைஞரணி பொறுப்பாளர், மகளிரணி பொறுப்பாளர், கிளை செயலாளர், மக்கள் பிரதிநிதி உள்ளிட்ட நிர்வாகிகள் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு எதிர்கட்சி இல்லங்களுக்கும் சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் ஒன்றிய அரசு தரும் நெருக்கடிகளையும் எடுத்துரைத்து அக்குடும்பம் சார்பில் அரசுக்கு கோரிக்கைகள் தெரிவிக்கப்பட்டால் அவற்றை அறிந்து கொண்டு குறை தீர்க்கும் பொருட்டு செயல்பட்டு விருப்பம் உள்ளவர்களை கழக உறுப்பினராக "ஓரணியில் தமிழ்நாடு செயலி மூலமும், உறுப்பினர் சேர்க்கை படிவம் மூலமும் இணைத்துக் கொள்வார்கள். இப்படி அறுபத்து எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் ஒரு கோடி கழக உறுப்பினர்கள் இணைந்து தமிழ்நாட்டின் நலன்காக்க இடையறாது உழைக்கும் பார்ப்போற்றும் திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் அவர்களின் மாபெரும் முன்னெடுப்பான "ஓரணியில் தமிழ்நாட்டு பரப்புரை வெற்றிக்கு சான்றாக அமைந்திருக்கிறது.

"மக்களிடம் செல், மக்களுடன் வாழ், மக்களிடமிருந்து கற்றுக் கொள், மக்களை நேசி, மக்களுக்கு சேவை செய் என்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் வாய்மொழிக்கேற்ப நடத்தப்படும் "ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை **"வெல்வோம் இருநூறு படைப்போம் வரலாறு"** என்ற முழக்கத்தை சாத்தியமாக்கும் என்றால் அது மிகையாகாது.

**தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!**

**தமிழ்பொங்கும் தென்மனத்தின் மாற்றம் மாறாது**
**திராவிட சிந்தனை ஒன்றியத்தில் நிறப்பும்வரை!**
**அச்சத்தின் உச்சத்தில் பாசிசம் கிளியாடிக்கிடக்கிறது**
**நிச்சியத்தின் உறுதியில் திராவிடம் வென்றுதீர இருக்கிறது.**